बीस रुपये Rs.20

रु.20 TWENTY RUPEES

INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU 95AB 369249

31 DEC 2021

எஸ். வரதராஜன
ஸ்டாம்பு வெண்டர்
எம்.ஐ.ஜி. 22, எல்லிஸ்நகர்
மதுரை–16, (தமிழ்நாடு)
ஆர்.சி.எண்: 6246/சி–2/93/13

## புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03ஆம் தேதி

மதுரை மாநகர், திருப்பரங்குன்றம் சாலை, வித்யா நகரில் இயங்கி வரும் தி மதுரைக் கல்லூரிக்காக அதன் இப்போதைய முதல்வர், திரு. S.ஜானகிராமன் அவர்கள் குமாரர் **முனைவர் ஜா. சுரேஷ்** ஒன்றாம் தரப்பாகவும், மேலும் ஒன்றாம் தரப்பினரின் சார்பாக **முனைவர் ம.கண்ணன், முனைவர் ச.கண்ணதாசன், முனைவர் த.காந்திமதி** ஆகிய மூவரும் ஒருங்கிணைப்பாளர்களாகவும்

**மதுரைக் கல்லூரிக்காக**

**முதல்வர்**

**ஒருங்கிணைப்பாளர்கள்**

1.

2.

3.

**மதுரைக் கம்பன் கழகத்திற்காக**

**தலைவர்**

**செயலாளர்**

**பொருளாளர்**

மதுரை மாநகர், ஞானஒளிவுபுரம், விசுவாசபுரி 4ஆவது தெரு, கதவு எண். 1 முகவரியில் இயங்கி வரும் மதுரைக் கம்பன் கழக அறக்கட்டளைக்காக அதன் தற்போதைய தலைவர், சங்கரர் அவர்களின் குமாரர் **திரு.ச.சீத்தாராமன்,** தற்போதைய செயலாளர் A.M.C.அருணாசலம் அவர்களின் குமாரர் **திரு.அ.புருஷோத்தமன்,** தற்போதைய பொருளாளர் திரு சொர்ணலிங்கம் அவர்களின் குமாரர் **திரு.சொ.சொ.மீ.சுந்தரம்** ஆகிய மூவரும் இரண்டாம் தரப்பாகவும் இருந்து இரண்டு தரப்பினரும் சேர்ந்து கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

இதன் ஒன்றாம் தரப்பான மதுரைக்கல்லூரி (தன்னாட்சி), தனது மாணவர்களுக்குப் பல்வேறு தமிழ் இலக்கியங்கள் குறித்த சான்றிதழ்/பட்டயப் படிப்புகளை வழங்குவதற்கு முன்வந்து அதற்கு இரண்டாம் தரப்பினரின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பினை வேண்டியுள்ளது. இது தொடர்பாக இரண்டு தரப்பினராலும் கீழ்க்காணும் வகைகளில் மாணவர்களை இணைத்துப் பயிற்றுவிக்கத் தீர்மானிக்கப்படுகிறது.

1. இரண்டு தரப்பினரும் சேர்ந்து மாணவர்களுக்கு மிகுபயன் தரும் வகையில் கம்பராமாயணக் காப்பியம் /பல்வேறு தமிழ் இலக்கியம் தொடர்பாகச் சான்றிதழ் /பட்டயப் படிப்புகள் வழங்குதல்.
2. பயிற்சிப் பட்டறைகள் / மாநாடுகள் / கருத்தரங்குகள் நடத்துதல்.
3. கல்லூரிப் பேராசிரியர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.

எனவே, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரஸ்பர நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, இங்குள்ள இரண்டு தரப்புகளும் பின்வருமாறு ஒப்புக் கொள்கின்றோம்.

**பிரிவு 1 : ஒத்துழைப்பு**

1.1 இரு தரப்பினரும் பொதுவான குறிக்கோள்களால் ஒன்றுபட்டுள்ளனர், மேலும் அவர்கள் தங்கள் செயல்பாடுகளை மேம்படுத்தும் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பிற்கான வழிகளை நிறுவவேண்டும். சாத்தியமான வாய்ப்புகள் குறித்து இரு தரப்பும் ஒருவருக்கொருவர் கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும். மற்றும் ஒருவருக்கொருவர் கூடுதல் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள அனைத்துத் தகவல்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**மதுரைக் கல்லூரிக்காக**

**முதல்வர்**

**ஒருங்கிணைப்பாளர்கள்**

1\.
2\.
3\.

**மதுரைக் கம்பன் கழகத்திற்காக**

**தலைவர்**

**செயலாளர்**

**பொருளாளர்**

1.2 முதல் தரப்பினருக்கும் இரண்டாம் தரப்பினருக்கும் இடையிலான ஒத்துழைப்பு, முதல் தரப்பினரின் தேவைகளை மனத்தில் கொண்டு, பொருத்தமான கற்பித்தல் / பயிற்சிமுறைகளை உருவாக்குவதில் அவர்களுக்குக் குறிப்பிடத்தக்க உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் இரண்டாம் தரப்பினரின் அறிவுசார் திறன்களைத் திறம்படப் பயன்படுத்த உதவுவதாக அமைகிறது.

1.3 கற்பித்தல் வகைக்கான செலவுகளை முழுமையாக ஏற்றுக்கொள்ள இரண்டாம் தரப்பினர் முன்வந்துள்ளனர் என்பது தெரிவிக்கப்படுகிறது.

**பிரிவு 2 : நோக்கம்**

2.1 இரு தரப்பினருக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பு மாணவர் சமூகத்திற்கு அவர்களின் திறன் மற்றும் அறிவை மேம்படுத்த பெரும் நன்மையாக இருக்கும் என்று இரு தரப்பினரும் நம்புகின்றனர்.

**பிரிவு 3 : செல்லுபடி பற்றியது**

3.1 ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலம் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று வருடங்கள் ஆகும். இந்த ஒப்பந்தம் ஒரு மாத முன்னறிவிப்பில் இரண்டு தரப்பினராலுமோ அல்லது ஒரு தரப்பின் விருப்பத்தின் படியோ ரத்து செய்யப்படலாம் என ஒப்புக்கொள்ளப்படுகிறது.

**ஒப்புக்கொள்ளப்பட்டது**

**மதுரைக் கல்லூரிக்காக**

**முதல்வர்**

**ஒருங்கிணைப்பாளர்கள்**

1.

2.

3.

**மதுரைக் கம்பன் கழகத்திற்காக**

**தலைவர்**

**செயலாளர்**

**பொருளாளர்**

**சாட்சிகள்:**

1. S. Valanarayal, S/o T.S. Sundaram, 5D G Block, Vaigai Apts, Bypass Road, Madurai

2. தி. வேலாயுதன்